**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**வழக்கு எண். OS 51 of** *2016*

*2022*ம் ஆண்டு ஜீன் திங்கள் *15*ம் நாள் வாதியின PW1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (*1889*ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண்.*44*வது பிரிவு *5*வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.எம்.ரைஉறானா பேகம் கிரேடு *2* பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமானம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் பாலமுருகன் | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

*15.06.2022*

பிராது தாக்கல் செய்த போது எனது தகப்பனார் தான் வழக்கறிஞரை பார்த்து தகவல் சொன்னார் என்றால் நானும் சேர்ந்து தான் தகவல் சொன்னேன். பிராதில் நான் சொல்லிய லட்சுமியம்மாள் எனக்கு என்ன உறவுமுறை என்றால் என் அப்பாவிற்கு அப்பாவின் அம்மா. பிராதில் லட்சுமியம்மாளின் இறப்பு சான்றிதழ் எதுவும் நான் தாக்கல செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள் கொடிவழி ஜாபிதாவை நிரூபிக்க லட்சுமியம்மாளின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. லட்சுமியம்மாளின் கணவர் பெயர் அழகிரிசாமி. வா.சா.ஆ-*1* ஆவணத்தில் லட்சுமியம்மாளின் கணவர் பெயர் அழகிரிசாமி என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.*1* ஆவணத்தின் அசல் என் கைவசம் இல்லை மற்றொரு பங்காளி குருசாமி மகன் ராமரிடம் உள்ளது. வா.சா.ஆ.*1* ஆவணத்தின் பைமாஸ் எண் ஏதாவது சொல்லிருக்கிறாதா என்றால் இல்லை. முதலில் தாக்கல் செய்ப்பட்ட பிராதில் பைமாஸ் எண்ணோ, சர்வே நம்பரோ குறிப்பிடவில்லை

என்றால் சரிதான். திருத்தப்பட்ட பிராதில் சொத்து விபரத்தில் தாவாசொத்தானது நத்தம் சர்வே எண்.137 என்றும், புதிய சர்வே எண்.475/2 என்றும் உட்பிரிவின்படி 475/27 என்றும் சொல்லிருகிறோம். எதன் அடிப்படையில் எண்களை சொல்லியிருக்கிறோம் என்றால் கோட்டாச்சியரிடம் மனு கொடுத்து வருவாய் துறையினர் அளவீடு செய்து சொன்னதன் அடிப்படையில் திருத்தம் செய்தோம். அந்த கோப்புகளை இந்த வழக்கில் நான் ஜெராக்ஸ் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.2 ஆவணம் 2002ம் ஆண்டு ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆணத்தில் பைமாஸ் எண்ணோ, சர்வே எண்ணோ சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தில் கண்ணன் வகையறாவுக்கு பாகத்தில் கிடைத்ததாக சொல்லப்பட்டுள்ளதா அல்லது பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் அப்படி எதுவும் சொல்லவில்லை. வா.சா.ஆ.3 ஆவணத்தில் ராமசாமி நாயக்கர் வகையறாவுக்கு சொத்துக்கள் எவ்வாறு கிடைத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று சொல்லப்பட்டது. வா.சா.ஆ.3 ஆவணத்தில் தாவா சொத்துக்கள் சம்மந்தப்பட்ட சர்வே எண், உட்பிரிவு படி சர்வே எண்.475/27 என சொல்லபட்டுள்ளதா என்றால் இல்லை பைமாஸ எண்.137 என்று மட்டும் சொல்லப்பட்டுள்ளது. வா.சா.ஆ.3 ஆவணம் வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் ஏற்பட்டப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் பைமாஸ் எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணம் ராமர் வகையறா கண்ணன் வகையறாவுக்கு எழுதிக்கொடுத்தது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்தில் தாவா சொத்தின் சர்வே எண்.475/2 என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்தில் தாவா சொத்தில் கிழமேல் அளவு 10.6 அடி என சொல்லப்பட்டுள்ளது தென்வடல் அளவு 63 அடி என்று சொல்லப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் தென்வடல் அளவு 60 அடி என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்திலும் கிழமேல் அளவு 10.6 அடி எனவும், தென்வடல் அளவு 63 அடி எனவும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்திற்கும் வா.சா.ஆ.2,3,5 ஆவணத்திற்கும் தாவா சொத்திற்கும் அளவுகள் மாறுபடுகின்றன என்றால் சரிதான். தாவா சொத்தின் நான்குமால் எல்லைகள் வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் தற்போதைய நடைமுறையின் படி சொல்லப்பட்டுள்ளது. தற்போதைய நடைமுயைபடி நான்குமால் எல்லையை என்னால் சொல்லமுடியும் என்றால் மேற்கே தென்வடல் பாதை, வடக்கே கிழமேல பாதை, கிழக்கே சங்கரப்ப நாயக்கர் இடம், தெற்கே பிரதிவாதியின் தகப்பனார் பாண்டி இடம். என்னுடைய

வழக்குரையில் தாவா சொத்து ஆக்குபைடு நத்தம் என சொல்லியிருக்கிறோம் என்றால் சரிதான். தாவா சொத்திற்கும் வடக்கே உள்ள பாண்டிக்கு பாத்தியப்பட்ட சொத்து வேறு சர்வே நம்பரில் உள்ளது என்றால் சரிதான். அந்த இடம் பிரதிவாதயின் தகப்பனாருக்கு கிரைய பத்திரத்தின் படி பாத்தியபட்டது என்றால் சரிதான். பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடமானது உட்பிரிவின்படி 475/30, 475/31, 475/32, 475/33ல் அமைந்துள்ளது என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. சர்வே எண். 475/27ல் பிரதிவாதிகள் பெயரில் ஆவண பதிவுகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். எதன் அடிப்படையில் பிரதிவாதியின் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்கள் இடத்தில் 6 அடி இடம் பிரதிவாதிக்கு இருப்பதாக சொல்லி எங்களை கல் போடவிடாமல் தடுத்தால் வழக்கு தாக்க் செய்துள்ளேன். 6 அடி இருப்பதாக சொல்லி கல் போடவிடால் தடுத்ததாக வழக்கில் சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. மொத்த இடத்திற்கும் தான் வழக்கு தாக்கல் செய்திருக்கிறோம். தடுத்தது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. தாவா சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டு அனுபவதில்இருக்கிறது என்பதை காட்ட பட்டாவோ, தீர்வைரசீதுகள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.475/27 இடத்திற்கு கோமதி கணவர் பெயர் பெத்துராஜ் ஊர் கல்லூரணி என்பவர் பெயரில் பட்டா உள்ளது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. உண்மையிலே இந்த தாவா சொத்து சம்மந்தமாக வழக்கு சொல்லவேண்டும் என்றால் மேற்படி கோமதிக்கு எதிராக தாக்கல்செய்திருக்க வேண்டும் என்றும் இந்த பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யமுடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்து நான் சொன்ன சர்வே எண்ணில் இருப்பதை காட்ட நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்ய அறிக்கை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால அதற்காக தான் மனு செய்துள்ளேன். நான் தாவா சொத்து வேறு இடத்தில் உள்ளது என்றும தவறுதலாக சர்வே எண்.475/ 27உள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சரவே எண்.475/27ல் உள்ள சொத்து ஆக்குபைடு நத்தமாக இருந்து அனுபவம் செய்து கோமதி என்பவர் பெயரில் பட்டா வழங்கப்பட்டு அவர் தான் அனுபவித்து வருகிறார் என்றும அந்த விபரம எனக்கு தெரியும என்று சொன்னால் சரியல்ல. இந்த பிரதிவாதி கிரையப்படி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை தான் அனுபவித்து வருகிறார் என்றும், எனக்கு பாத்தியப்பட்ட சொத்தை ஆக்கிரமிப்பு செய்யவேண்டிய அவசியம் பிரதிவாதிக்கு ஏற்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. கோமதியை எதிர்த்து வழக்க தாக்கல் செய்யமுடியாமல் இந்த பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு

தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.